சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் : MCOP:18/2020
and
MCOP: 31/2020

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் சாமிவேல்முருகன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

22.09.2023

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆகும். மதுரை தேவதாஜ் மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை அசல் ம.சா.ஆ 2 ஆகும். மதுரை தேவதாஜ் மருத்துவமனையில் வழங்கிய காயச்சான்று அசல் ம.சா.ஆ 3 ஆகும். குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆகும். 1ம் எதிர்மனுதாரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆகும். எனது இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6 ஆகும். மதுரை தேவதாஜ் மருத்துவமனையின் மருத்துவ ரசீதுகள் (எண்ணம்– 16) அசல் ம.சா.ஆ 7 ஆகும். அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.8 ஆகும். மனுப்படி

**தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**